**Arimaa Nokku Journal** **ISSN: 2320-4842**
**(UGC Care Group-I Journal)** **Vol-18 No. 03 July-September 2024**

# தமிழ் வாசித்தலில் மெல்ல கற்போருக்கான அணுகுமுறைகள்

***இரா. இராஜா,***
முனைவர் பட்ட ஆய்வாளர் (பகுதிநேரம்), தமிழ்த்துறை, பெரியார் பல்கலைக்கழகம்,
சேலம் - 636001., தமிழ்நாடு , இந்தியா.

***ஆ. சிலுவைமுத்து***
ஆய்வு நெறியாளர்
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை , தொன்போஸ்கோ கலை மற்றும் அறிவியல் கல்லூரி
தருமபுரி –636809, தமிழ்நாடு, இந்தியா.

## APPROACHES TO SLOW LEARNERS IN TAMIL READING

**R. RAJA**
Department of Tamil, Periyar University Salem – 636011, Tami Nadu, India
Dr.A.Siluvaimuthu
Assistant Professor, Department of Tamil, Don Bosco College, Salem – 636809, Tamil Nadu, India.

**ABSTRACT**
Language is a skill-based subject, while the purpose of other subjects is to explain concepts that can be learned through language, language is aimed at mastering the four skills of listening, speaking, reading, and writing. Students who acquire listening and speaking skills before entering school learn reading and writing skills in school. Reading skills are the next step in knowledge development based on written language. Reading (or reading) is the act of taking in line-shaped letters through the eyes, converting them into sound-shaped letters and releasing them through the mouth. This study aims to improve reading and writing skills.

**KEYWORDS: Skill-based, listening and speaking, knowledge development, converting.**

மொழிப்பாடம் ஒரு திறன் சார்ந்த பாடம் , மொழியின் வாயிலாகவே பிறப்பாடங்களைக் கற்றுக் கொள்ள முடியும் கருத்துக்களை விளக்குவதே பிற பாடங்களுக்குரிய நோக்கமாக அமைய, மொழிப்பாடமோ கேட்டல், பேசுதல், படித்தல், எழுதுதல் ஆகிய நால்வகைத்திறன்களையும் செம்மையாகக் கையாளுவதையே நோக்கமாகக் கொண்டுள்ளது. பள்ளியில் சேருவதற்கு முன்பே கேட்டல், பேசுதல் திறன்களைப் பெற்றுக்கொண்டு வரும் மாணவர்கள் பள்ளியில்தான் படித்தல் திறனையும், எழுதுதல் திறனையும் கற்றுக்கொள்கிறனர். படித்தல் திறன் என்பது எழுத்துமொழியை அடிப்படையாகக்கொண்ட அறிவு வளர்ச்சியின் அடுத்த படிநிலையாகும். வரி வடிவ எழுத்துகளைக் கண்களின் வழியே உள்வாங்கி ஒலி வடிவ எழுத்துகளாக மாற்றி வாய் வழியாக வெளியிடும் செயலே படித்தல் (அல்லது) வாசித்தல் என அழைக்கப்பெறுகின்றது. □□□□ □□□□□□□□□ □□□□□□□□□ □□□□□□□□ □□□□□□□□□ □□□□□□□□□ □□□□□□□□□□□□□□ □□□□□□□□ □□□□□□□□□□□.

**திறவு சொற்கள்**
திறன் சார்ந்த. கேட்டல் மற்றும் பேசுதல், அறிவு வளர்ச்சி , மாற்றி .
□□□□□□□□□

நம் பள்ளிகளில் பயிலும் மாணவர்களில் ஒருசிலர் படித்தல் திறனில் மிகவும் பின்தங்கியுள்ளனர். படிப்பதற்கு ஏற்ற வகையில் அவர்களை ஊக்கப்படுத்தும் அணுகுமுறைகளை ஆசிரியர்கள் மேற்கொள்ள வேண்டும். தொடக்க நிலைக்கல்வியில் மாணவர்களுக்கு நன்கு திட்டமிட்டு படித்தல் திறனை வளர்க்கும் வகையில் பயிற்சிகள் வழங்கிவிட்டால் அவர்களால் எளிதில் இத்திறனை வளர்த்துக்கொள்ள இயலும்.

படித்தல் (அல்லது) வாசித்தல் □□□□□□□ சிறப்பை நெட்டி ஆர்.பார்ட்டல் (NETTIE R BARTELL) என்பவர்,

**"படித்தல் திறனில் சரியாக பயிற்சி பெறாத ஒருவன் உலகைப் பற்றிய பொது அறிவை பெற இயலாதவன் ஆகிவிடுகின்றான். பொருளாதார தற்காப்பு பெற முடியாதவனாகவும் வாழ்வதற்கான திறன் குறைந்தவனாகவும் ஆகிவிடுகின்றான்"** என்று குறிப்பிடுகிறார்.

## தமிழ் படித்தலில் மெல்ல கற்போருக்கான அணுகுமுறைகள்

- ஒலிவடிவம் கற்பித்தல்
- வரிவடிவம் கற்பித்தல்
- ஒலி மற்றும் வரி வடிவத்தை இணைத்துக்கற்பித்தல்
- படங்களுடன் சொற்களை இணைத்துக்கற்பித்தல்
- எழுத்துகளை இணைத்துப்படிக்க கற்பித்தல்
- குறில் நெடில் வேறுபாடு
- எஏ, ஐ, ஒஓ, ஒள - வரிசை சொற்களைப் பயிற்சி அளித்தல்
- நா பயிற்சிகள்
- புத்தகப்பூங்கொத்து பயிற்சிகள்
- செய்தித்தாள்கள் படித்தல் பயிற்சி
- துணைக்கருவிகளைப் பயன்படுத்தி பயிற்சி அளித்தல்
- விளையாட்டு மூலம் கற்பித்தல்

## ஒலி வடிவம் கற்பித்தல்

மொழி என்பது ஒலிவடிவம், வரி வடிவம் என இரு வடிவங்களைக் கொண்ட பொருள் தரும் தொடரமைப்பு.மொழி என்பது ஒலிகளாலானது. ஒலிகளைக் கொண்டே சொற்களும், சொற்களைக் கொண்டே வாக்கியங்களும் அமைக்கப்பெறுகின்றன. தமிழ் மொழியைப் பொருத்தவரை மாணவர்களுக்கு எழுத்துகளைக் கற்றுக்கொடுத்தாலே போதுமானது. ஏனெனில் எழுத்துகளும் அவற்றிற்குரிய ஒலியும் மாறுவதில்லை. ஆகையால் ஆசிரியர்கள் ஒவ்வோர் எழுத்துகளுக்கும் உரிய சரியான ஒலிப்பு முறையைக் கற்றுக்கொடுத்தால் மாணவர்களுக்கு வாசிக்கதெரியவில்லை என்ற நிலையே முற்றிலும் இருக்காது.

மொழியில் ஒலிவடிவம் என்பது பொருள்தரும் ஒலிக்குறிப்பைக் குறிக்கும். ஒலிகளைக் குறியீடுகளாகக் கொண்டு ஒருவரின் எண்ணங்களையும் கருத்துகளையும் வெளிப்படுத்த மொழி உதவுகிறது.ஒலிக்குறிப்பைக் கற்பிக்க, மாணவர்களுக்குத் தெரிந்த உயரினங்களின் பெயர்களைக் கூறச் செய்தல், உறவுப்பெயர்களைக் கூறச் செய்தல், அவர்களைச் சுற்றியுள்ள சூழலில் கேட்டறிந்த ஒலிகளை ஒலிக்கச் செய்தல் போன்ற செயல்பாடுகளின் மூலம் ஒலிவடிவத்தைக் கற்பிக்கலாம். மேலும் எழுத்துகளில் ஒலிவடிவத்தைப் பாடல் வடிவில்

**"அ இதுவோர் அத்திப்பழம்!**
**ஆ என்பவன் ஆசைப்பட்டான்!**
**இ என்பவன் இதோ என்றான்!**
**ஈ என்பவன் ஈ என்றான்!**
**உ என்பவன் உரி என்றான்!**
**ஊ என்பவன் ஊதென்றான்!**
**எ என்பவன் எனக்கென்றான்!**
**ஏ என்பவன் ஏதென்றான்!**
**ஐ என்பவன் ஐயா என்றான்!**
**ஒ என்பவன் ஒன்றென்றான்!**
**ஓ என்பவன் ஓடிவிட்டான்!**
**ஔ என்பவன் கௌவிக்கொண்டான்!"**

என்ற **கா.நமச்சிவாயத்தின்** பாடலைப் பாடி உயிர் எழுத்துகளின் ஒலி வடிவத்தை அறியச்செய்யலாம். இதே போன்று மெய் எழுத்துகள், உயிர்மெய் எழுத்துகளை ஆசிரியர்கள் தேவைக்கேற்ப பாடல் வழியாக ஒலி வடிவத்தைக் கற்பிக்கும் பொழுது மாணவர்களுக்கு எவ்வித ஐயமின்றி எளிதில் சென்றடையும்.

<u>வரி வடிவம் கற்பித்தல்</u>

மொழியில் ஒலியைக் குறிக்கும் குறியீடு எழுத்து; எழுதப் பெறுவது எழுத்து, மனகருத்துக்களைப் பிறருக்கு வரிவடிவமாக உணர்த்துவது எழுத்து. வரிவடிவம் இல்லாத மொழி காலப்போக்கில் மறைந்துவிடும். பண்பட்ட நாகரீகத்தையும் கலாச்சாரத்தையும் அடுத்த தலைமுறைக்கு இட்டுச் செல்ல 'கல்மேல் எழுத்தாக' வரிவடிவம் அமைகிறது. வரிவடிவத்தின் தன்மையை உணர்ந்து தொடக்கநிலை முதல் வரிவடிவம் மாறாமல் கற்பிப்பது மிக இன்றியமையாதது. மாணவர்களுக்கு வரிவடிவம் கற்பிக்கும் முன்னர் எளிய **உடலியக்க தசைப் பயிற்சிகளை வழங்க வேண்டும்**. மாணவர்களிடம் மைதா மாவு, களிமண்,காகிதம் போன்றவற்றைக் கொடுத்து நன்கு பிசையச் செய்தல் மற்றும் உருவங்களைச் செய்ய சொல்லலாம். மேலும் தாள்களைக் கைகளால் கசக்கச் செய்தல், கரும்பலகைகளில் கிறுக்கச் செய்தல் மற்றும் ஆசிரியரால் எழுதப்படும் எழுத்துகளின் மீது மாணவர்களே வரியொற்றி எழுதுவதற்குப் பயிற்சிப் பெறல் போன்ற செயல்களின் வழியே வரிவடிவத்தைக் கற்பிக்கலாம்.

**<u>ஒலி மற்றும் வரிவடிவம் பொருத்துதல்</u>**

மெல்ல கற்கும் மாணவர்களுக்கு வழங்கப்படவேண்டிய முக்கிய பயிற்சியானது ஒலி மற்றும் வரிவடிவத்தைப் பொருத்துதலாகும். இதை வளர்க்க வண்ணமயமானப் படங்களைக் காட்டி பெயரைக் கூறச் செய்தல், பின்பு படங்களுடன் கூடிய எளியச் சொற்களைக்காட்டி படத்தின் பெயரைக்கூறச் செய்து அதிலுள்ள வரிவடிவத்தை படிக்கச் செய்யலாம். ஆசிரியர் வரிவடிவத்தைக் கரும்பலகையில் எழுதி ஒவ்வோர் எழுத்தின் ஒலி வடிவத்தையும் வரிவடிவத்தோடு பொருத்திக் கூறச் செய்யலாம் (உ – ம்) **'மரம்' – படத்தைக்காட்டி மரம் என்று கூறச் செய்து பின்பு கரும்பலகையில் பெரிய எழுத்துகளில் 'மரம்' என்றெழுதி ஒவ்வொரு எழுத்தாகக் கூறச்செய்வதன் மூலம் ஒலி வடிவத்தையும்,** வரிவடிவத்தையும் பொருத்திக் கற்பிக்க இயலும் .

**<u>படங்களுடன் சொற்களை இணைத்து கற்பித்தல்</u>**

கற்றலில் பின்தங்கிய மாணவர்களுக்கு **சொற்களுக்கு முன் படங்கள்** என்பதைப் போன்று படங்களைக் காட்டி சொற்களைக் கற்பிக்கலாம் எளிய செயல்வழிக்கற்றல் அட்டைகளில் படங்களுடன் உள்ள சொற்கள், பாடநூல்களில் படங்களுடன் உள்ள சொற்கள், மற்றும் ஆசிரியரால் தயாரிக்கப்பட்ட படச்சொற்கள் அடங்கிய அட்டைகளைப் பயன்படுத்திச் சொற்களையும் அதிலுள்ள எழுத்துகளையும் தெளிவுப்படுத்தலாம் (உ-ம் ) 'சங்கு' படமும், 'சங்கு' என்ற சொல்லும் எழுதப்பட்ட படஅட்டையில் உள்ள எழுத்துகளை இணைத்து படிக்கப் பயிற்சி அளித்தல் மற்றும் ஓரெழுத்து, ஈரெழுத்து, மூவெழுத்துச் சொற்களை மாணவர்களுக்கு இணைத்து படிக்கப் பயிற்சி வழங்கலாம். (உ–ம்) ஈ, ஈவு, ஈட்டி. பின்பு மாணவர்களைப் பாடநூல் (அல்லது) புத்தகப் பூங்கொத்துவில் உள்ள ஒரெழுத்து, ஈரெழுத்து, மூவெழுத்து சொற்களை வட்டமிட்டு குறிக்கச் செய்யவும், குறித்தவைகளை வாய்விட்டு படிக்கச் செய்வதால் படிப்புத்திறன் மேம்படும், பின்பு பெரியசொற்களுக்குப் பயிற்சி அளிக்கலாம்.

<u>எழுத்துகளை இணைத்துப்படிக்க கற்பித்தல்</u>

குறிப்பாக மெல்ல கற்கும் மாணவர்களுக்கு எழுத்துகளை இணைத்து வாசிக்க பயிற்சி வழங்கவேண்டும்.

**உதாரணமாக, பட்டம் –** என்ற சொல்லை,

ப
பட்
பட்ட
பட்டம்

என ஒவ்வொரு எழுத்தாக சேர்த்து வாசிக்கப் பயிற்சி அளிக்கலாம்.

**அம்மா-** என்ற சொல்லை

அ
அம்
அம்மா

இங்கு 'மா' நெடில் எழுத்தை வேறுபடுத்தி உச்சரித்துக் காட்டலாம்.

**<u>குறில்நெடில் வேறுபாடு</u>**

தமிழ் எழுத்துகள் ஒலிக்கும் கால அளவால் குறில் நெடில் என இருவகைப்படும். குறில் எழுத்துகள் ஒரு மாத்திரை அளவாகவும் நெடில் எழுத்துகள் இரண்டு மாத்திரை அளவாகவும் ஒலிக்கவேண்டும். மாறாக, குறிலை நெடிலாகவோ நெடிலை குறிலாகவோ ஒலித்தால் சொல்லின் பொருள் மாறுபடும். சொற்களைக் கரும்பலகையில் எழுதி ஆசிரியர் படித்துக் காட்டவும், பின்பு குறில் சொல்லிற்கு இணையான நெடில் சொல்லைக் கண்டறியச் செய்தல். குறில் (அ) நெடில் எழுத்துகளில் தொடங்கும் சொற்களைப் பாடநூலில் அடிக்கோடிடச் செய்து படிக்கப் பயிற்சி வழங்கலாம்.

<u>செயல்பாடு</u>

ஆசிரியர் குறில் எழுத்தில் தொடங்கும் சொற்களைக் கூற மாணவர்கள் நெடில் எழுத்தில் தொடங்கும் சொற்களைக் கூற விளையாட்டு வடிவில் குறில் நெடில் வேறுபாட்டைக் கற்பிக்கலாம்.

| **ஆசிரியர்** | **மாணவர்** |
|---|---|
| படம் | பாடம் |
| படு | பாடு |
| விடு | வீடு |
| பல் | பால் |
| கல் | கால் |
| நகம் | நாகம் |
| மலை | மாலை |
| கலை | காலை |

எனத்தொடர்ந்து விளையாட்டை நடத்தி அனைத்து மாணவர்களும் பங்குபெறுவதை உறுதிசெய்யவேண்டும்.இங்கு பொருளற்ற வார்த்தைகளையும் தொடக்கநிலையில் அனுமதிக்கலாம்.

உ.ம் தடு - தாடு

மெல்ல கற்கும் மாணவர்களுக்கு ,த-குறில், தா- நெடில் என்ற கருத்தினை மட்டுமே அறிய வாய்ப்பளிப்பதாக அமையவேண்டும்.

**<u>எஏ, ஐ, ஒஓ, ஔ வரிசையைக் கற்பித்தல்</u>**

மெல்ல கற்கும் மாணவர்களுக்கு மொழி கற்றலில் எஏ, ஐ, ஒஓ, ஔ வரிசை எழுத்துகளைத் தெளிவுப்படுத்துவது ஆசிரியர்களின் தலையாயக் கடமையாகும்.

எ,ஏ வரிசையில்- ெ , **n** என்ற பொதுவான துணைவெழுத்துகள் இடம்பெறும் என்பதை முதலில் தெளிவுப்படுத்த வேண்டும்.பின்பு கெ,கே போன்ற எழுத்துகளில் எ,ஏ என்ற ஓசையில் முடிவதை உச்சரிக்க செய்து அறிய செய்யவேண்டும்.

ஐ வரிசையில்- i என்ற பொதுவான துணைவெழுத்து இடம்பெறுவதையும்,கை,சை,பை போன்ற ஐ வரிசை எழுத்துகளில் ஓசை ஐ யில் முடிவதைப் பயிற்சி அளிக்கவும்.

ஒ,ஓ வரிசையில்- **b - h, n – h,**என்ற பொதுவான வடிவத்தை அறிய வைத்து,கொ,கோ,சொ,சோ எழுதுத்துகள், ஒ,ஓ ஓசையில் முடிவதை அறிய செய்யவேண்டும்.

ஔ வரிசையில்- - **b – s** என்ற பொதுவான வடிவத்தை அறிய செய்து, **bfs, bசs,,** எழுத்துகள்,ஔ என்ற ஓசையில் முடிவதை தெளிவுப்படுத்தவேண்டும்.

மெல்ல கற்கும் மாணவர்களுக்கு எ,ஏ,ஐ,ஒ,ஓ,ஔ வரிசையில் ஏற்படும் கற்றல் சவால்களை நன்றாக களையச் செய்தால் கற்றல் மேம்படும் .

**<u>நா பயிற்சிகள்</u>**

ஒரே ஒலியுடைய எழுத்துகளும்(ல,ல,ல) ஒத்த ஒலியுடைய எழுத்துகளும் (ல,ள,ழ) அடுத்தடுத்து வருமாறு தொடரை அமைத்து மாணவர்களைக் கூறச் செய்யலாம்.இவ்வாறு செய்வதன் மூலம் எழுத்துகளை முறையாக ஒலிக்கும் திறன்களை மாணவர்கள் பெறுவர்.

**அருந்தமிழ் மூதாட்டி ஔவயார்,**

**“சித்திரமும் கைப்பழக்கம் செந்தமிழும் நாப்பழக்கம்**
**வைத்ததொரு கல்வி மனப்பழக்கம்” என்றார்.**

நாவின் பழக்கத்தால் நல்ல தமிழ் வருகிறது.நல்ல தமிழ் என்பது உச்சரிப்பு பிழையில்லாமல் ஒலிப்பதாகும்.அந்த ஒலிப்பு முறையினைத் தொடக்க வகுப்பில் தமிழ் பயிற்றும் ஆசிரியர்கள் நன்கு தெளிவுப்பற்றிருக்க வேண்டும்.அப்பொழுதான் மாணவர்களுக்குக் கற்றுதர இயலும்.

**“நாவின்நுனி மேலும் கீழும் அசைந்து ஒரேவகையான சொற்களையோ**
**தொடர் ஒலிகளையோ திரும்பத் திரும்ப ஒலிக்குமாறு பயிற்சி**
**வழங்குவதே நாபிறழ்ப்பயிற்சியாகும் “**

[illegible]

[illegible]

[illegible]

ஒரே ஒலியுடைய எழுத்துகளும் (ல,ல,ல) ஒத்த ஒலியுடைய எழுத்துகளும் (ல,ள,ழ) அடுத்தடுத்து வருமாறு தொடரை அமைத்து மாணவர்களைக் கூறச் செய்யலாம்,

**"அவலளந்தால் இவள்,**
**அவலளப்பாள். இவள்**
**அவலளந்தால், அவள்**

அவலளப்பாள். அவளும்
இவளும் அவள்
அளக்காவிட்டால், எவள்
அவலளப்பாள்?"

**புத்தகப் பூங்கொத்துப் பயிற்சி**

[illegible]

அனைத்து பள்ளிகளுக்கும் வழங்கப்பட்டுள்ள புத்தகப் பூங்கொத்து புத்தகங்களை மெல்ல கற்கும் மாணவர்களுக்கு வழங்கி படிக்கச் செய்வதன் மூலம் படித்தல் மேம்படும். அனைவருக்கும் கல்வி இயக்கம் மூலம் வண்ணப்படங்களுடன் கூடிய பல்வேறு ஆர்வமூட்டும் நூல்கள் வழங்கப்பட்டு,மாணவர்களின் கற்றலை மேம்படுத்த வழிவகைசெய்யப்பட்டுள்ளன.இவை ஆசிரியர்களால் மாணவர்களுக்கு ஆர்வமூட்டி நாள்தோறும் அவர்கள் வாசிப்பதை மேற்பார்வையும்,வழிகாட்டலும் செய்யவேண்டும். புத்தகப் பூங்கொத்து புத்தகங்களை மாணவர்கள் பார்வையில் படும்படியாக வகுப்பறையில் கம்பிப்பந்தலில் தொங்கவிடவேண்டும்,அப்பொழுது தான்,அதன்மீது நாட்டம் ஏற்படும்.

**செய்தித்தாள்கள் படித்தல் பயிற்சி**

செய்திதாள்களில் இடம்பெறும் தடித்த தலைப்புகள், சிறிய தொடர்களை வாசிக்க நாள்தோறும் பயிற்சி அளிப்பதன் மூலம் படித்தலில் மெல்ல கற்கும் மாணவர்கள் முன்னேற்றம் காண்பர்.ஆசிரியர் வகுப்பறைகளில் செய்திதாள்களை வாசிப்பதற்கு வாய்ப்பு ஏற்படுத்திட வேண்டும்.

வாராந்திர,மாதாந்திர இதழ்கள்,சிறுவர் மணி,சிறுவர் மலர்,வார மலர்,குடும்ப மலர் போன்ற செய்தித்தாள்களுடன் இடம் பெறும் நூல்களில் வரும் விடுகதைகள்,புதிர்கள்,ஆறு வித்தியாசங்களைக் கண்டறிதல்,படக்கதைகள், போன்றவை மாணவர்களின் கற்றல் ஆர்வத்தைத் தூண்டுமாகையால் வகுப்பறையில் அதற்கான வாய்ப்புகளை ஆசிரியர்கள் உருவாக்கவேண்டும்.

**துணைக்கருவிகள் கொண்டு கற்பித்தல்**

சுழல் அட்டைகள், சார்ட், சொருகு அட்டைகள், பட அட்டைகள், வார்த்தை அட்டைகள், எழுத்தட்டைகளைக் கொண்டு பயிற்சி அளிப்பதன் மூலம் மாணவர்களிடம் படித்தலில் ஆர்வமும், ஈடுபாடும் ஏற்படும்.மேலும் கல்வி தொழில்நுட்ப வளர்ச்சியையும் குறிப்பாக தொலைக்காட்சி,கணினி,மடிக்கணினி,அலைபேசி,இணையம் போன்றன முக்கியமான இடம் பெறுகின்றன.

**விளையாட்டு மூலம் கற்பித்தல்**

குழந்தைகள் தங்கள் கற்றல் சூழ்நிலையில் மகிழ்ச்சியான ஓர் அனுபவத்தைப் பெற இப்பாடநூல்கள் வழிவகுக்கும் வகையில் உருவாக்கப்பட்டுள்ளன.

**குழந்தைகளின் கல்வி தொடர்பானகோட்பாடு என்பவற்றில் விளையாட்டு முக்கிய இடம் அளிக்கப்பட்டுள்ளது.கல்வி வல்லுநர்களின் நோக்கில் விளையாட இருவகை நோக்கங்களை நிறைவு செய்யும்.**
பிள்ளைகள் பல்வேறு வகைப்பட்ட தேவைகளை நிறைவு செய்ய விளையாட்டுகள் உதவும்.இத்தேவைகள் உளவியல் கல்வி, சமூக, மனவெழுச்சி, உளத்திறன் தொடர்பானவை,இவ்வகையில் பிள்ளைக்கு அறிவு வளர்ச்சிக்கான மூல ஆதாரமாக விளையாட்டு விளங்குகிறது.

ஆரம்பக் கல்வியில் இன்று பல்வேறு பாடங்கள் ஒன்றிணைத்து கற்பிக்கப்பெறுகின்றன.இவ்வாறான ஒன்றிணைப்பை ஏற்படுத்த விளையாட்டு செயல்பாடுகள் உதவும். இவ்வகையில் பாடங்கள் மரபு வழியாக பிரிவு பட்டிருக்கும் நிலைமையை நீக்க விளயாட்டு உதவுகிறது.

மலையினின்று வீழும் அருவி,ஆறாகப் பெருகி வரும்பொழுது சற்று மடைமாற்றினால் கடலில் சென்று வீணாவதைத் தடுத்து பயிர்கள் செழிக்கப் பயன்படுத்தலாம்.அதேபோல் குழந்தைகளின் உள்ளார்ந்த ஆற்றல்களையும் திறன்களையும் வெளிக்கொணர உரிய வழிமுறைகளை வழங்கும் வகையில் தொடக்க நிலை தமிழ்ப்பாடநூல்களில் வழங்கப்பட்டுள்ளன.
தொடக்கநிலைப் பாடநூல்கள் திறன் அடிப்படையிலும்,திறன்கள் யாவும் செயல்பாடு வடிவிலும்,குழந்தைகளின் உள்ளார்ந்த மொழியாற்றலை வெளிக்கொணரும் விதத்திலே அமைக்கப்பெற்றுள்ளன.

**முடிவுரை**
மெல்ல கற்கும் மாணவர்களின் படித்தல் திறனை மேம்படுத்த, எழுத்துகளின் ஒலிப்பு முறை, எழுத்துகளை அடையாளம் கண்டு ஒலிக்கும் முறை மற்றும் படித்தல் திறனை மேம்படுத்துவதற்கான பார்த்தல், ஒலித்தல், பொருளுணர்தல் என்ற மூன்று நிலைகளில் நிகழ்கின்றன. படங்களுடன் சொற்களை இணைத்து படித்தல், குறில் நெடில் வேறுபாடுகளை உணர்ந்து படித்தல், நா பயிற்சிகள், புத்தகப் பூங்கொத்து பயன்பாடு, செய்திதாள்களைப் படித்தல், படக்கதைகள் கூறுவதன் மூலம் மெல்ல கற்கும் மாணவர்களின் படித்தலை மேம்படுத்தலாம் என்பது தெளிவாகின்றது.

**துணை நின்றவை**
1.ந.சுப்புரெட்டியார் - தமிழ் பயிற்று முறைகள்(மெய்யப்பன் தமிழாய்வகம்)
2.வெ.இறையன்பு - படிப்பது சுகமே (நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்)
3.நல்லாமூர் முனைவர் கோ.பெரியண்ணன் - தமிழில் தவறின்றி எழுத,பேச,கற்க !
4. பேராசிரியர் வி.கணபதி - நற்றமிழ் கற்பிக்கும் முறைகள் (சாந்தா பப்ளிஷர்ஸ்)
5.வசந்தகுமார் செள - தாய்மொழியும் திறன்மேம்பாடும் (வானவில் பதிபகம்)

